சிவமயம்.

# கபிலராற்செய்த

# இன்னாநாற்பது.

இதற்குரையுடன்,

ம-ள-ள-ஸ்ரீ,

கொன்றமாநகரம்

## சண்முகசுந்தரமுதலியா

ரவர்களாற்பரிசோதித்து,

## தி-சபாபதிபிள்ளையவர்கள்

மட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சிந்தாதிரிப்பேட்டை - சாமிநாயக்கர்வீதி - ௭௮-நெம்பர்

தாது ௵ - ஆவணி ௴

சிவமயம்.

# இன்னா நாற்பது.

முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா
பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் றாடொழா தார்க்கு.

(எ-து) முக்கண்ணினையுடைய பகவனடிதொழாதார்க்கின்னாவாம், பொற்பனைக் கொடியையுடைய வெள்ளியோனைநினையாதொழுகுத லின்னாவாம், சக்கரப்படையையுடையானைமறப்புகளின்னாவாம், அவைபோல வேற்படையையுடையமுருகன்றாடொழாதார்க்குஇன்னாவாம்,

பந்தமில்லாதமனையின் வனப்பின்னா
தந்தையில்லாத புதல்வ னழகின்னா
வந்தணரில்லிருந் தூணின்னாதாங்கின்னா
மந்திரம் வாயாவிடின்.

(எ-து) சுற்றமில்லாத மனையி னழகு கண்டார்க்கின்னாவாம், தந்தையை யிழந்த புதல்வனழகு கண்டார்க்கின்னாவாம், மறையவரில்லின் மறையவரல்லாதா ரிருந்துண்ணுமுணவின்னாவாம், அவைபோல சூழ்ந்தசூழ்ச்சிகள்வாயா தொழியின் இன்னாவாம். எ-று. (௨)

பார்ப்பாரிற்கோழியுநாயும்புகலின்னா
வார்த்தமனைவி யடங்காமை நற்கின்னா
பாத்தில்புடைவை யுடையின்னா தாங்கின்னா
காப்பாற்றாவேந்தனுலகு.

(எ-து) அந்தணர்மனையிற் கோழியுநாயும்புகுதலின்னாவாம், வரைந்துகொண்டமனைவி தன்னைபகனுக் கடங்காமை மிகவுமின்னாவாம், இணையில்லாத தனிப்புடைவையுடுத்த லின்னாவாம், அவைபோலகாக்கமாட்டாவரசனுலகுதான் இன்னாவாம்-எ-று. (௩)

கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழியாளர் தொடர் பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

(எ-து) கொலையை யுடைய மறமன்னர் கீழ்வாழ்த லின்னாவாம், பெருநீரைப்புணை கொண்டன்றிநீந்துத லின்னாவாம், கடுமொழியாளரொடு தொடர்பின்னாவாம், தடுமாறி வாழ்தலுயிர்க்கு இன்னாவாம்-எ-று. (௪)

எருதிலுழவர்க்குப் போகீரமின்னா
கருவிகண்மாறிப் புறக்கொடுத்த லின்னா
திருவுடையாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

(எ-து) எருதில்லாத வுழவர்க்கு செவ்விகழியுமீரமி
ன்னாவாம், பிடித்தபடைகளா லுள்ளசெய்கையை யவ்
விடத்து நின்று மாறிப்பகைவர்க்குப் புறங்கொடுத்த லி
ன்னாவாம்,செல்வ முடையாரைச்செறுநலரிய வாதலிற்
செறுத லின்னாவாம், பெருவலியை யுடையார்க்கின்னா
மைசெய்தற் கின்னாவாம்-எ-று. (௫)

சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றியாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை.

(எ-து) வேலியில்லாத கரும்பினைக்காத் தோம்பலின்
னாவாம், துளியொழுகும்பழங் கூரையையுடையமனையை
யடைந் துறைதலின்னாவாம், முறைமைகெடவாழுமரசு
மின்னாவாம், சூழ்ச்சியின்றிச்செய்யும்வினையுமின்னாவா
ம்-எ-று (௬)

அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா
இடும்பையுடையார் கொடையின்னா வின்னா
கொடும்பாடுடையார் வாய்ச் சொல்.

(எ-து) அறத்தையுடைய நெஞ்சத்தார் சொல்லுங் க
டுஞ்சொல்லின்னாவாம், மறத்தை யுடைய நெஞ்சத்தார்
போரின்கண்மடிந்தொழுக லின்னாவாம், வறுமையாளி

டும்பை யுடையார் வண்மை யின்னாவாம், நடுநிலைமையி
லாதார்வாய்ச்சொற்களு மின்னாவாம்-எ-று. (௭)

ஆற்றலிலாதான் பிடித்தபடை யின்னா
நாற்றமிலாத மலரி னழகின்னா
தேற்றமிலாதான் றுணிபின்னா வாங்கின்னா
மாற்றமறியா னுரை.

(எ-று) வீரமில்லாதவன் கொண்ட படையின்னாவாம், நாற்றமில்லாதபூவினழகின்னாவாம், ஒன்றைத்தெரிந்து துணியமாட்டாதான் றுணிவுமின்னாவாம், அதுபோலதனக்கெதிருரைக்குமவன்மாற்றத்தை யறிந்துரையாதானுரை இன்னாவாம் எ-றுமாற்றமறியா னுரையென்பது சொல்லறியா னென்றுமாம். (௮)

பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மையின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலினெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு.

(எ-று) நுகத்துப் பகலாணிபோல் நடுநிற்கு நெஞ்சத்தார் குணமின்றியொழிதலின்னாவாம், மகிழ்ச்சி யுடைத்தாகிய நண்பை யுடையார் அன்பில்லாமை யின்னாவாம், போர்செய்துமென்று தொடங்கின ரோடுதலின்னாவாம், நீதியில்லாத மனத்தவரோடு நட்டலின்னாவாம்,

-எ-று-பகல்போலுநெஞ்சத்தாரென்பது இருடீர்ந்தமனத்தா ரென்றுமாம். (௯)

கள்ளில்லா மூதூர் களிகட்கு நற்கின்னா
வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா
வண்மை யிலாளர்வனப் பின்னாவாங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

(எ-து) கள்ளின்றியொழிந்த முதுபதிகள் களிப்பார்கட்கின்னாவாம், உபகாரிகளில்லாமை யிரவலர்க்குமிக வின்னாவாம், வண்மை யில்லாதார்வடிவினழகுகளின்னாவாம், அவைபோல பண்ணில்லாதகுதிரையின் செலவுகள் இன்னாவாம்-எ-று. (௧௦)

பொருளுணர்வாரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறிதாந் தனிப்போக் கின்னா
அருளில்லாதார் தங்கட்செல வின்னாவின்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

(எ-து) பொருளி னன்மையுணர்வாரில்லாவிடத்துப் பாடிச் சொல்லுதலின்னாவாம், இருண்மிக்கசிறுவழியின்கட்டனிப்போகுத லின்னாவாம், அருளில்லார் மாட்டொன்றைவேண்டிச் செல்லுதலின்னா வாம், பொருளில்லாதார் வண்மைப் புரிதலின்னாவாம்.-எ-று. (௧௧)

உடம்பாடிலாத மனைவிதோ ளின்னா
இடனில் சிறியாரோடியாத்தநண் பின்னா

விடங்களியாளர் தொடர்பின்னா வின்னா
கடனுடையார் காணப் புகல்.

(எ-து) தன்னோடு பொருத்தமில்லாதமனைவியோடு சேர்தலின்னாவாம், மனதின்கண் விரிவில்லாத சிறியாரோடுபிணித்த நட்பின்னா வாம், ஒழுக்கமில்லாதாரோடு தொடர்ச்சியின்னாவாம், தனிசுடையார் காணப்புகல் எ-று. (௧௨)

தலைதண்டமாகச் சுரம் போதலின்னா
வலைசுமந் துண்பான் பெருமித மின்னா
புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா வின்னா
முலையில்லாள் பெண்மை விழைவு.

(எ-து) தன்றலையிழவாகச் சுரத்தின்கண் போதலின்னாவாம், வலையினைச் சுமந்துண்பான் செருக்கின்னாவாம், புலையுள்ளிவாழ்த லுயிர்க்கின்னாவாம், முலையிலாதாள் பெண்மையை விழைதலின்னாவாம்-எ-று. (௧௩)

மணியிலாக் குஞ்சரம்வேந் தூர்தலின்னா
துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா
பணியாதமன்னர்ப் பணிவின்னா வின்னா
பிணியன்னார் வாழு மனை.

(எ-து) மணியணியாதயானையைவேந்தன் மேற்கொள்ளுதலின்னாவாம், துணியமாட்டாதவன் சொல்லும் வீரங்களின்னாவாம், முன்பு தாழ்வில்லா மன்னர்தாழ்வுக

ண்டலின்னாவாம், பிணிபோன்ற மனைவி வாழுமனையி ன்னாவாம்-எ-று. (க௪)

வணரொலியைம் பாலார் வஞ்சித்த லின்னா
துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா
புணர்பாவை யன்னார் பிரிவின்னா வின்னா
வுணர்வா ருணராக் கடை.

(எ-து) வணரொலியைம்பாலார் தங்கொழுநனைவஞ் சித்தலின்னாவாம், தொத்து தாங்குகின்ற மாவினின்று விழுந்தபழங்களின்னாவாம், பொருந்தியபாவைபோல்வா ர்பிரிவின்னாவாம் அறியுந்தன்மையையுடையாரறியாராயி னின்னாவாம்-எ-று. (க௫)

புல்லார்புரவிமணி யின்றியூர் வின்னா
கல்லாருரைக்குங் கருமப்பொரு ளின்னா
வில்லாதார் நல்ல விருப்பின்னா வாங்கின்னா
பல்லாருணாணப் படல்.

(எ-து) புல்லையார்கின்ற புரவி மணியின்றி யேறுத லின்னாவாம், கல்லாதார் சொல்லுங் காரியத்தின்பயனின் னாவாம், வறுவியா னல்லனவற்றை விரும்புதலின்னாவா ம், அவைபோலபலர் நடுவணாணும்பழிபடுதல்இன்னாவா ம்-எ-று. (க௬)

உண்ணாதுவைக்கும் பெரும்பொருள்வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சிதனியின்னா

கண்ணிலொருவன் வனப்பின்னா வாங்கின்னா
வெண்ணிலான் செய்யுங் கணக்கு.

(எ-து) தான்றுவ்வாதுவைக்கும்பெரும்பொருளை வைத்தலின்னாவாம், பொருந்தாத பகைவரொடுபொருந்துதன் மிகவின்னாவாம், கண்ணில்லாத வொருவனழகின்னாவாம், அவைபோலஎண்ணறியாதான்செய்யுங் கணக்குகள் இன்னாவாம், எ-று. (கஎ)

ஆன்றவிந்த சான்றோருட்பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல்பெரிதின்னா
நோன்றவிந்துவாழாதார்நோன்பின்னாவாங்கின்னா
வீன்றுளை யோம்பாவிடல்.

(எ-து) அமைந்தடங்கிய சான்றோர் நடுவுட்பேதைபுகலின்னாவாம், மயங்கியிருண்டபொழுதின் கண்வழி வழங்குதன்மிகவு மின்னாவாம், பொறுத்தடங்கிவாழாத நோற்றலின்னாவாம், அவைபோல வீன்றுளைப்பாதுகாவாது விடுத்தலின்னாவாம்-எ-று. (கஅ)

உரனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா
மறனுடையா னுடையான் மார்பார்த்தலின்னா
சுரமிரியகானந் செலவின்னா வின்னா
மனவறியாளர் தொடர்பு.

(எ-து) அறிவுடையாளன் மனமடிந் திருத்தலின்னாவாம், பகையுடை யானுடையான் மார்பார்த்த லின்னாவா

ம், சுரத்தாற் சேறலரிய கானத்துப்போதலின்னுவாம், மனத்தின்கண்வறுமியார்தொடர்ச்சி இன்னுவாம்-எ-று.

குலத்துப் பிறந்தவன் கல்லாமையின்னு
நிலத்திட்டநல்வித்து நாறுமையின்னு
நலத்தகையார் நாணுமை யின்னு வாங்கின்னு
கலத்தல் குலமில்வழி.

(எ-து) நல்ல குலத்துப்பிறந்தவன் கல்லாமைகளின்னுவாம், நன்னிலத்திட்ட நல்வித்து முளையாமையின்னுவாம், நல்லவடிவினை யுடைய மகளிர் நாணின்றியொழுகுதலின்னுவாம், அவைபோல குலமில்வழிக்கலத்தல் இன்னுவாம்-எ-று. (உ0)

மாரிநாட்கூவுங் குயிலின் குரலின்னு
வீரமிலாளர் கடுமொழிக் கூற்றின்னு
மாரிவளம் பொய்ப்பினூர்க்கின்னு வாங்கின்னு
மூரியெருத்தா லுழவு.

(எ-து) மாரிகாலத்தின் கட்குயிற்குரலின்னுவாம், மனத்தினீரப்பாடில்லாதார் கடுமொழி உறுதலின்னுவாம், மழைவளங்குன்றினூர்க் கின்னுவாம், அவைபோலமுதிய வெருதாலுழவு இன்னுவாம்-எ-று. (உக)

சத்தவகையாலுவவாதார்க் கீப்பின்னு
பாத்துண்ண லில்லார்குழைச் சென்றுணவின்னு

மூத்தவிடத்துப் பிணியின்னா வாங்கின்னா
வோத்திலாப்பார்ப்பா னுரை.

(எ-து) கொடுத்தவளவினின்புறாதார்க்குக் கொடுத்த லின்னாவாம், பகுத்தூட்டி யுண்ணாதாரமாட்டுச்சென் றுண்ணலின்னாவாம், மூப்புவந்தவிடத்து பிணிவருதன்மிகவுமின்னாவாம், அவைபோல மறைநூலோதாதவந்தணனுரை இன்னாவாம்-எ-று. (உஉ)

யானையின் மன்னரைக் காண்டனனியின்னா
ஊனைத்தின் றூனைப் பெருக்குதன் முன்னின்னா
தேனெய்புளிப்பிற் சுவையின்னா வின்னா
கானியாறிடையிட்ட வூர்

(எ-து) யானைப்படையிலா அரசரைக் காண்டன் மிகவுமின்னாவாம், ஊனைத்தின்றுதன் னூனைப்பெருக்குதல் முந்துறவின்னாவாம், தேனொடிய நெய்சுவை திரிந்துபுளிப்பினின்னாவாம், அவைபோலகானியாற்றிடையிட்டவூர் இன்னாவாம். (உங)

சிறையில்லாமூதூரின் வாயில்காப்பின்னா
துறையிருந்தாடை கழுவுதலின்னா
வறைபறையா யவர்சொல்லின்னா வின்னா
நிறையில்லான் கொண்டதவம்

(எ-து) மதிலிலாதமுதியவூரின் வாயிலின்கட்காக்கு காப்பின்னாவாம், நீர்த்துறையின்கணிருந்து வுடுத்தவாங்

டைமாசுபோக்குதலின்னாவாம் அறையும்பறைபோலதா
ங்கேட்டமறைகளைப்பிறர்க்குச் சொல்லுவார் சொற்களி
ன்னாவாம், பொறிகளைத்தடுக்கமாட்டாதான் கொண்ட
தவமின்னாவாம்-எ-று. (உச)

ஏமமில்மூ தூரிருத்தன் மிகவின்னா
தீமையுடையா ரயலிருத்த னற்கின்னா
காமமுதிரி னுயிர்க்கின்னா தாங்கின்னா
யாமென்பவரோடு நட்பு

(எ-து) காவலில்லாத முதியவூரின்கணிருந்துறைதன்மி
வு மின்னாவாம், தீயகுணங்களையுடையவர்க்கயலிருத்தமி
ன்மிகவுமின்னாவாம்; காமமிகுந்தாற் றன்னுயிர்க்கின்னா
வாம், அவைபோல்தம்மைமதிப்பவரொடுநட்பின்னாவா
ம்-எ-று (உரு)

நட்டாரிடுக்கண் கண்டானற்கின்னா
வொட்டார் பெருமிதங்கண்டாற் பெரிதின்னா
கட்டில்லா மூதூ ருறையின்னா வாங்கின்னா
நட்டக வற்றினுணக்கு

(எ-து) தன்னொடுநட்டார்க்குறுமிடுக்கண்களைக் காண்
டன்மிகவு மின்னாவாம், பகைவருடையசெருக்கினைக்
காணுதலின்னாவாம், கட்டில்லாத மூதூரின்கணுறைதலி
ன்னாவாம், அவைபோல விளைத்தகவற்றி னொடுங்குத
இன்னாவாம்.-எ-று. (உசா)

பெரியாரோடியாத்த தொடர் விடுதலின்னா
வரியவைசெய்துமெனவுரைத்தலின்னா
பரியார்க்குத் தாமுற்றகூற்றின்னாவின்னா
பெரியார்க்கு தீயசெயல்

(எ-து) குணத்தாற் பெரியாரோடுபிணித்ததொடர்ச்சியைநீங்குதலின்னாவாம், அரியசெயல்களைச் செய்வேமென்றுபிறற்குமேற்கொண்டுசொல்லுதலின்னாவாம், காதலிலாதார்க்குத் தாமுற்ற விடும்பையைச்சொல்லுதலின்னாவாம்,வலியாற்பெரியார்க்குத்தீயவற்றைச்செய்த லின்னாவாம்-எ-று. (உஎ)

பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா
கிழமையுடையாரைக் களைந்திடுத லின்னா
வளமையிலாளர்வனப்பின்னா வின்னா
விளமையுண் மூப்புப் புகல்

(எ-து) பெருமையுடையாரைப்பெருமையழியப்பேசுதலின்னாவாம், உரிமை யுடையாரை யவ்வுரிமையைச் சிதைத்த லின்னாவாம், வண்மையில்லாதாரழகின்னாவாம், இளமைகாலத்து மூப்புப்போலத்தளர்ச்சியைப்பண்ணும் பிணிகள் புகுதலின்னாவாம்-எ-று. (உஅ)

கல்லாதானூருங் கலிமாப்பரிப் பின்னா
வல்லாதான் சொல்லு முரையின்பய னின்னா

வில்லார் வாய்ச்சொல்லினயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

(எ-று) கற்றுவல்லனல்லாதான் மேற்கொள்ளுமண மிக்கமாவின் செலவின்னாவாம், மாட்டாதான்சொல்லுஞ் சொல்லின் பயனின்னாவாம், வறுவியார் வாயிற் சொல்லினன்மையின்னாவாம், அவைபோலக்கல்லாதானவையி ன்கண்ணொன்றைச் சொல்ல மேற்கோடல் இன்னாவாம்

குறியறியான் மாநாகமாட்டுவித்த லின்னா
தறியறியானீரின்கட் பாய்ந்தாடலின்னா
வறிவறியாமக்கட் பெறலின்னா வின்னா
செறிவிலான் கேட்ட மறை.

(எ-று) குறிப்பறியாதவன் மிக்கநாகத்தை ஆட்டு வித்தலின்னாவாம், நீந்தமாட்டாதா னீரின்கட்சென்றாடுத லின்னாவாம், அறியப்படு மறிவினை யறியாத புதல்வனை ப்பெறுதலின்னாவாம், அடக்கமில்லாதான் கேட்டமறை களின்னாவாம். எ-று. (கூo)

நெடுமாநீள்கோட்டுயர்பாய்த லின்னா
கடுஞ்சின வேழத் தெதிர் சேற லின்னா
வொடுங்கியர வுறையு மில்லின்னா வின்னா
கடும்புலி வாழு மதர்.

(எ-று) நெடியமரத்தின்கணீண்ட கோட்டினுயரின்க ணின்றுகிழ்பாய்தலின்னாவாம், மிக்கசினத்தையுடைய

யானையிலின திரோ சேறலின்னாவாம், பாம்பொடுங்கியுறை யுமனைகளின்னாவாம், கடியபுலிக ளுறையும் வழிகளின்னாவாம்-எ-று. (நடக)

பண்ணமையா யாழின் கீழ்ப்பாடல் பெரிதின்னா
வெண்ணறிய மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்ணளியிலாளர்பகை.

(எ-து) வீக்கமறியாத யாழினிடத்திருந்துபாடுதலின்னாவாம், கணிதமறியாத மக்களுடைத்துநாட்செலவுகளின்னாவாம், மண்ணில்லாதமுழவினொலியின்னாவாம், அவைபோலகுணமிலாரொடுபகைகோடலின்னாவாம், ()

தன்னைத் தான்போற்றா தொழுகு தனற்கின்னா
முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா
நன்மையி லாளர்தொடர்பின்னா வாங்கின்னா
தொன்மை யுடையார் கெடல்.

(எ-து) தன்னைத்தீமையிற் செல்லாமைத்தான்காவா தொழுகுதன்மிகவு மின்னாவாம், ஒருவனெதிருரையார்புறங்கூறுதலின்னாவாம், நற்குணங்களில்லாதாரோடுநட்பின்னாவாம், பழையதாகவருகிறசெல்வமுடையகுடிப்பிறந்தார்கெடுத லின்னாவாம், எ-று. (நட)

கள்ளுண்பான் கூறுங்கரும்பொருளின்னா
முள்ளுடைக்காட்டினடக்கை கணியின்னா

வெள்ளம் படுமாக் கொலையின்னா வாங்கின்னா
கள்ளமனத்தார் தொடர்பு.

(எ-து) கள்ளுண்ணு மொருவனுணாக்கு முளைப்பய னின்னாவாம், முள்ளுடைக் கானத்துச் சேறன் மிகவுமி ன்னாவாம், வெள்ளத்தினடுவேயகப்பட்டமாவினைக்கே றவின்னாவாம், அவைபோல வஞ்சனையுடைய மனத்த ரோடுதொடர்ச்சி இன்னாவாம்-எ-று. (நச)

ஒழுக்கமிலாளர்க்குறை வுரைத்த லின்னா
வழுக்கு நூலும் விழையாதார்க்கின்னா
விழுத்த தொழிலவர் நட்பின்னா வின்னா
கழிப்புலாய் மண்டிலங் கொட்டு.

(எ-து) ஒழுக்கமுடைய ரல்லாதார்க்குத்தொடர்புகூ றுதலின்னாவாம், சிறிய நூல்களும் அந்நூல் களைவிரும்பா ர்க்கின்னாவாம். பிறராலிழிக்கப்பட்ட தொழிலினையு டையாரோடு நட்பின்னாவாம், கதுவாய்ப்படக்குறைந்த மதியினது செலவுகாண்ட லின்னாவாம்,-எ-று. கழிப்புலா ய் மண்டிலங்கொட்டு எ-ரு-நல்லாற கழிக்கப்பட்டநா டுகளிற் சென்றுதிரித லின்னாவாம். (நரு)

எழிலியுறை நீங்கினீண்டையார்க்கின்னா
குழவி யிளியமாத் தோசை நற்கின்னா
குழவிகளுற்ற பிணியின்னா வின்னா
வழக்குடையான் பேதை யெனல்.

(எ-து) மழைபெய்யத்தவறினிவ்வுலகத்தார்க் கின்னா வாம், குழலில்லாத வினியமரங்களினோசைகேட்டலின்னாவாம், குழவிகள்படும்பிணியின்னாவாம், அழகுடையன்பிறராற்பேதையெனப்படுத லின்னாவாம்-எ-று. (நசு)

பொருளிலான் வேளாண்மை காமுறுதலின்னா
நெடுமாட நீணகர்க்கைத்தின்மை யின்னா
வருமனைபார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடங்கை விடுவார் நட்பு.

(எ-து) பொருளில்லாதான் வேளாண்மை காதலித்த லின்னாவாம், நெடிய மாடத்தையுடையபெரியநகரத்தின் கட்கைப்பொருளின்றியிருத்தலின்னாவாம், பிறர்மனைபார்த்திருந்துண்ணு முணவின்னாவாம், கெடுமிடத்தின்கட்கைவிடு நட்பின்னாவாம்,-எ-று. (நஎ)

நறியமலர்ப்பெரிது நாறாமையின்னா
துறையறியா நீரிழிந்து போகுதலின்னா
வறியான் விழுப்படுத லின்னா வாங்கின்னா
சிறியார்மேற் செற்றங் கொளல்.

(எ-து) அழகிய மலரின் கண்மிகவுநாறாமை யின்னாவாம், துறையறியாதவ நீரிழிந்து போகுத லின்னாவாம் அறிவுடையா னல்லாதவ னறிவுடையாரால்விழுவப்படுதலின்னாவாம், அவைபோலக் கீழ்மக்கண்மாட்டுசெற்றங்கொள லின்னாவாம்-எ-று. (நஅ)

பிறன்மனையாள்பின்னோக்கும்பேதைமை யின்னா
மறமிலாமன்னர் செருப்புகுத லின்னா
வெறும்புறம் வெம்புரவி ஏற்றின்னாவின்னா
திறனிலான் செய்யும்வினை.

(எ-று) பிறனொருவன் மனையாள் திடத்தினைப்பார்க்கு மறியாமை யின்னாவாம், மனத்திடங்கம்பீரமில்லாத மன்னர் போரின்கட்புகுத லின்னாவாம், வெம்புரவியை பண்ணில்லாதேறுகை யின்னாவாம், நெறியறியாதான் செய்யும் வினைகளின்னாவாம்-எ-று. (கரு)

கொடுக்கும்பொருளில்லான் வள்ளண்மையின்னா
கடித்தமைந்த பாக்கினுட் கற்படுதலின்னா
கொடுத்துவிடாமை கவிக்கின்னா வின்னா
மடுத்துழிப்பாடாவிடல்.

(எ-று) பிறர்க்குக் கொடுக்கும் பொருளில்லாதான் கொடை புகுத லின்னாவாம், பிளந்தமைந்த பாக்கின் கட்கற்படுத லின்னாவாம், கொடையமையக்கொடுத்துவிடாதொழிதல் கவிசெய்வானது கவிக்கின்னாவாம், கொண்டானைத் துக்கப்படாதொழிதலின்னாவாம்-எ-று. ( )

அடக்கமுடையவன் மீளிமை யின்னா
துடக்கமிலாத வன்றற்செருக்கின்னா
வடக்கலம்வவ்வுத லின்னா வாங்கின்னா
வடக்க வடங்காதார் சொல்.

(எ-று) ஐம்பொறிகளை யடக்கிய வொருவன் சொல்வழியின்னாவாம், துணிந்து நுடங்கி யொன்றைச்செய்ய மாட்டாதான் தன்னை மதித்தலின்னாவாம், ஒருவனை டைக்கலம் வைத்த பொருளைக் கொடாதொழிதலின்னாவாம், அவைபோல வின்னா கற்பினைக்கொள்ளாதார்க்குச்சொல்லுஞ்சொல்-எ-று. ௪௧)

இன்னாநாற்பது

மூலமுமுரையும் முற்றிற்று.

